2026 ஜூலை மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 142/2025

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 (LW3) – அஜித்பாண்டி |
| தகப்பனார் பெயர்: | பாஸ்கரன் |
| ஊர்: | அணைக்கரைப்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஆட்டோ ஓட்டுநர் |
| வயது : | 26 |

15.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், அணைக்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.08.2023ம் தேதி சுமார் மாலை 6.45 மணியளவில் நானும், எனது பெரியப்பா கணேசன் என்பவரும் போடி, அணைக்கரைப்பட்டி பிரிவு பக்கத்தில் இருந்த போது, போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதற்கு என்னை சாட்சியாக இருக்கச் சொன்னார்கள். எழுதப்பட்ட

பார்வை மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய காவலஅவகாசம் வழங்கியும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 15.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.15 15:35:41 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
15.07.2026